# 2014 -ஆம் ஆண்டு மறைக்கல்வி வாரச் செய்தி.

கிறுஸ்துவின் மாணவனாக வாழ்வது எளிதல்ல. முற்றுலும் எளிதல்ல. ஆகவே தான் இயேசு "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின் தொடரட்டும்". (லூக் 9:23) என்று கூறுகிறார். இருப்பினும், உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்று உறுதியளிக்கிறார் இயேசு. (மத் 28:20)

இவ்வாண்டு 21-ஆம் திகதி செப்டம்பர் மாதம் கொண்டாடவிருக்கும் மறைக்கல்வி வார கருப்பொருள் **"துணிவுடன் இருங்கள் நான் உலகின் மீது வெற்றி கொண்டுவிட்டேன்"** என்பதாகும். (யோ 16:33)

விசுவாசிகளான ,நம் பயணத்தில் பல இடறுகள் மற்றும் தடைகள் யாவும் நம் வழிப்பயணத்தில் அச்சமூட்ட வைப்பது இயல்பே, அதுவும் இயேசுவின் மாணவர்கள் என்றதும் அத்தடைகள் யாவும் இரட்டிப்பாகும். மலேசியாவில் அமைதியான முறையிலும்,ஆர்ப்பாட்ட முறையிலும், பல்வேறான மதிநுட்ப முறையிலும் மன அழுத்தங்கள் நமக்கு வந்த வண்ணமாகவே இருக்கிறது. இப்படி இருக்கையில் , நம்முடைய கிறுஸ்த்துவ விசுவாசத்தை இன்னும் திடம் பெற கைப்பற்றிட நாம் என்னென்ன வழிமுறைகளை மேற்கொள்கிறோம் ?

முதலாவதாக , நம்முடைய விசுவாசமானது இயேசுவோடு இணைந்து பயணித்து உறவாடுகிற விசுவாசமானதாக இருக்க நாம் முயற்சிக்க வேண்டும் (யோ 15:4-5 ; கொலே 2:6-7). இரண்டாவதாக , நம் விசுவாசமானது பரிசுத்த ஆவியானவரின் ஆதிக்கத்திலும் அரவணைப்பிலும் இருத்தல் வேண்டும். ஏனென்றால் , இயேசுவின் போதனைகளை நமக்கு நினைவுப்படுத்த உதவியாகவும் ,போதிக்கவும் பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டுள்ளார் (யோ 14:26). மூன்றாவதாக, நம் விசுவாசமானது சமூக வாழ்க்கையின் ஒற்றுமையில் மலரும் ஒரு வலிமையைக் கொண்டிருக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டது போல , விசுவாசத்தின் மூன்று அடிப்படை அம்சங்களைப் பெற்றோர்கள் தெரிந்து கொள்ளவும் , இயேசுவை அன்புச் செய்யவும் , அறியவும் ஒரு வழிக்காட்டியாக திகழ்வதே மறைப்போதகர்களின் முக்கியப் பங்காகும். இயேசு நமக்குத் தெளிவான வாக்குறுதியைக் கொடுத்துள்ளார். ஆகவே, வாருங்கள் அவரின் உயிருள்ள செய்தியை மெய்யுணர்ந்து நம்பிக்கைக் கொள்வோம். நாம் பார்க்கும் , கேட்கும் மற்றும் உணரும் செய்திகள் பல வேளைகளில் நம்மை அச்சுருத்தச் செய்யும். இருப்பினும் , நம்பிக்கையில் நாம் தாழ்ந்து போகக் கூடாது. காரணம் , "அவர் உலகை வென்று விட்டார்".

2014- ஆம் ஆண்டின் மறைக்கல்வி மீட்டுணர்தலைக் கொடுத்த மறைதந்தை ஜோன் ஆனந்தன் அவர்களுக்கு நன்றி.

மறைப்போதக வாரக் கொண்டாட்ட வாழ்த்துகள்.

பேராயர் டத்தோ கொர்ணலியுஸ் பியோங்
தலைவர்
மலேசிய மறைக்கல்வி மன்றம்